1974 சனவரி 19]

சென்னை, கிண்டி, குதிரைப் பந்தயச் சங்கத்திடமிருந்து வசூலிக்கப்பட்ட கேளிக்கை வரி

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை, கிண்டி, குதிரைப் பந்தயச் சங்கத்திடமிருந்து கடந்த ஐந்தாண்டுகளில் அரசினால் வசூலிக்கப்பட்ட கேளிக்கை வரி குறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கிண்டி, மெட்ராஸ் ரேஸ் கிளப்பிலிருந்து கீழ்க்கண்ட விவரப்படி கேளிக்கைவரி வசூலிக்கப்படுகிறது.

1968-69—ரூ. 11,20,588.66.

1969-70—ரூ. 10,59 862.05.

1970-71—ரூ. 12,75,521.58.

1971-72—ரூ. 11,94,441.81.

1972-73—ரூ. 7,07,160.50.

திரு. எல். பலராமன்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது, 1972-73-ல் ஏழுலட்சத்திச் சொச்சம் வருவாய் என்று கூறினார்கள். மற்ற ஆண்டுகளில் 12 இலட்சம், 13 இலட்சம் என்று கூறினார்கள். ஒரு ஆண்டில் மட்டும் ஏழு இலட்சமாகக் குறைந்ததற்குக் காரணம் ஏதாகிலும் உண்டா என்று அறிய விரும்புகிறேன். அந்தக் களியாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் குறைந்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: புக்கீஸ் அபாலிஷன் செய்ததன் காரணமாகக் குறைந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

Employees of the Pasteur Institute, Coonoor

* 11 Q.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the employees of the Pasteur Institute, Coonoor have submitted any petition to the Labour Officer to redress their grievances; and

(*b*) if so, the action taken thereon?

கூனூர், பாஸ்டர் நிலையப் பணியாளர்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தங்களது குறைகளைப் போக்க வேண்டி, கூனூர், பாஸ்டர் நிலையப் பணியாளர்கள், தொழிலாளர் நல ஆணையாளரிடம் மனு ஏதும் கொடுத்துள்ளனரா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) கூனூரிலுள்ள பாஸ்டர் நிறுவனப் பணியாளர் சங்கம் 1969-ஆம் ஆண்டில், (1) அகவிலைப்படி நிலுவை, பணிக்கொடை, சிலவகைப் பணியாளர்களது சம்பள வீதங்களை மாற்றியமைத்தல், (2) ஒரு தொழிலாளரை வேலைக்கு வைத்திராதிருத்தல் ஆகியவை குறித்த பிரச்சினைகளை எழுப்பியது. இந்த நிறுவனம், தொழில் தகராறுகள் சட்டத்தின் 2 (j) பிரிவின்படி, ஒரு தொழிற்சாலையின் செயல்வரம்பிற்குள் வராததால் அரசு இதனை நீதிமன்றத் தீர்ப்பிற்கு விட 1970, மே திங்களில் மறுத்தது. தொழிலாளர்கள் தாக்கல் செய்த ரிட் மனு 20—1—1973-ல் உயர்நீதிமன்றத்தால் தள்ளிவிடப்பட்டது. சட்ட இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும் நிறுவனத்தின் இயக்குநர், இப்பொருளை இந்திய அரசுக்குத் தெரிவித்துள்ள அல்லது அதனை நிறுவனத்தின் மத்தியக்குழு முன்பு வைத்த அடிப்படையில், பேச்சுவார்த்தை நடத்துமாறு கோயம்புத்தூர் தொழிலாளர் நலத் துணை ஆணையாளருக்குக் கட்டளையிடப்பட்டது. தமிழக அரசும், நீதிமன்றமும், பாஸ்டர் நிறுவனம் ஒரு தொழிற்சாலையல்ல என்று ஒருமுகமாக தீர்ப்பளித்துள்ளதால், தொழிலாளர் துறை, தொழில் தகராறுகள் சட்டத்தின்படி இதில் தலையிட வேண்டிய அவசியமில்லை. பாஸ்டர் நிறுவனத்திற்கும் அதன் தொழிலாளர் சங்கத்திற்கும் நேர்முக பேச்சுவார்த்தை நடப்பதாகக் கூறப்படுகிறது.

Tamil Nadu Chit Funds Act, 1961

* 12 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the Tamil Nadu Chit Funds Act, 1961 (Act XXIV of 1961) is being strictly enforced ;